**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**DVC No.01/2025**
**மனுதாரர் தரப்பு சாட்சி: 1**

| | |
|---|---|
| பெயர்: (ம.சா.1) இலக்கியா | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2026ம் ஆண்டு ஜுன் மாதம் 03ம் நாள் புதன்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் திருமதி.வி.நிவேதா அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** கோகுல் என்பவரிடம் போனில் பேசுவது வாட்ஸ் அப்பில் சார்ட் செய்வது இருந்தது என்றால் சரிதான். அதில் தவறான மெசேஜ் எதுவும் இல்லை. கோகுல் என்பவரிடம் தவறாக செல்போனில் மெசேஜ் செய்து அவர் வீட்டிற்கு வந்ததும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருட்களை நாங்கள் வாங்கினோம் என்பதற்கான எந்தவிதமான ரசீதோ, எழுத்துப்பூர்வமான ஆவணங்களோ இந்த மனுவுடனோ உடவிற கட்டளை பெற்ற பாதுகாப்பு அலுவலரிடமோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த பொருட்கள் இருந்தது என்பதற்கான போட்டோ எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான். பொருட்களை பொருத்து என்னுடைய வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு எந்த ஆதாரங்களோ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கு வாங்கிய இடத்தில் இரசீது கொடுக்கப்படும் என்றால் சரிதான். அதற்கு காரணமே பொருட்கள் எதுவும் என்னால் வாங்கப்படாததற்கான காரணமாகத்தான் என்னால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் வீட்டில்தான் வாங்கியதற்கான இரசீதுகள் இருந்தது. எனது உடமைகள் எதுவும் எதிர்மனுதாரர் வீட்டில் இல்லை என்றால் உள்ளது. மேற்படி பொருட்களுக்கான நகல் இரசீதை சம்மந்தப்பட்ட கடைகளில் கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. மேற்படி விசயத்தை மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால்

சரியல்ல. நான் உண்மையை மறைத்து தற்போது கூறுவதால்தான் மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2) சிவகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததும் சரி, பெருந்துறை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும் எதிர்மனுதாரர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சிவகிரி மற்றும் பெருந்துறை காவல் நிலையங்களில் புகார் கொடுத்தற்கு பின்னிட்டு நானாகவே வாழமுடியாது என்பதால் என்னுடைய தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சிவகிரி பள்ளியில் இருந்து எதிர்மனுதாரர் சம்மதத்துடன் மாற்றுசீட்டு வாங்கவில்லை என்றால் சரிதான். நான் பின்னிட்டு மொடக்குறிச்சி பள்ளியில் எனது மகனை படிக்க சேர்த்தேன் என்றால் சரிதான். மொடக்குறிச்சி பள்ளியில் என் மகனை படிக்க சேர்த்த விவரமோ, மொடக்குறிச்சி பகுதியில் குடியிருப்பது சம்மந்தமாக எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றால் சரிதான். மொடக்குறிச்சி பகுதியில் குடியிருந்தபோது எதிர்மனுதாரருக்கு தெரிந்து கோகுல் என்னுடைய வீட்டில் இருந்து அது சம்மந்தமாக எதிர்மனுதாரருடன் பிரச்சனை ஏற்பட்டு மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் நான் எதிர்மனுதாரருடன் வாழ விருப்பமில்லை என்று தெரிவித்துவிட்டேன் என்றால் சரிதான். அதனால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தெரிவித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டுதான் விவாகரத்து மனு மாண்புமிகு கொடுமுடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று எதிர்வாதம் செய்தார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டுதான் ஈரோடு மாவட்ட பெண்கள் பாதுகாப்பு அலுவலரிடம் இந்த மனுவை கொடுத்து, நீதிமன்றத்திற்கு இந்த மனு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

3) எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டி போராடியதன் காரணமாகவும், தன்னுடைய பாசமிகு மகனுடன் இருக்க வேண்டும் என்பதற்காக விவாகரத்து கொடுக்க மறுத்ததன் காரணமாக இந்த மனுவினை உண்மைக்கு புறம்பான சங்கதிகளுடன் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில்

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.03 15:56:43 +0530

சொல்லியுள்ள பொருட்கள் அனைத்தும் எதிர்மனுதாரரிடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பான சங்கதிகளுடன் பெண்கள் பாதுகாப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்தி தாக்கல் செய்துள்ள இந்த மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கோரியுள்ளார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.03 15:56:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.